. 4 பக்கங்கள் . விலை ரூ. 5




# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil
• பதிப்பு : நாகர்கோவில் • 07.04.2026 • மலர் 04 • இதழ்: 96
• Edition : Nagercoil • 07.04.2026 • Vol : 04 • Issue : 96 • Page : 4 • Rs. 5/-




### சாத்தான்குளம் சிறை மரணம்:

# ஆயுள் தண்டனை அச்சம் தராது; 9 பேருக்கும் மரண தண்டனை

## நீதிமன்றம் அதிரடி

சாத்தான்குளம், ஏப். 7

சாத்தான்குளம் ஜெயராஜ்பென்னிக்ஸ்கொலை வழக்கில் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீதர் உட்பட கைதான 9 பேரும் குற்றவாளிகள் என்று கடந்த மாதம் 23ம் தேதி நீதிபதி முத்து குமரன் தீர்ப்பளித்தார். தொடர்ந்து குற்றவாளிகளுக்கான தண்டனை விவரம் மார்ச் 30ம் தேதி அறிவிக்கப்படும் என்றும் இது தொடர்பாக சி.பி.ஐ. மற்றும் மாநில அரசின் நிலைப்பாட்டை அறிக்கையாக தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

ஆனால் மார்ச் 30ம் தேதி வழக்கு விசாரணைக்கு வந்த போது மத்திய, மாநில அரசுகள் சார்பில் அறிக்கை தாக்கல் செய்ய கால அவகாசம் கோரப்பட்டது. இதனால் இந்த வழக்கு ஏப்ரல் 2ம் தேதி ஒத்தி வைக்கப்பட்டது. அதன்படி சாத்தான்குளம் வழக்கானது மதுரை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது சிபிஐ தரப்பில் " குற்றவாளிகள் 9 பேருக்கும் உச்சபட்சமாக மரண தண்டனை வழங்க வேண்டும்" என்று வாதிடப்பட்டது. இதனை தொடர்ந்து குற்றவாளிகள் 9 பேருக்கான தண்டனை விபரம் வரும் 6ம் தேதி அறிவிக்கப்படும் என நீதி மன்றம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், இன்று அந்த வழக்கின் தீர்ப்பு அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த தீர்ப்பில், `` தந்தையையும், மகனையும் ஒருவர் முன் ஒருவர் நிர்வாணப்படுத்தி,

மனம்போனபோக்கில் தாக்கியிருக்கின்றனர்.

சம்பவத்தைப் படிக்கும்போதே மனம் பதைபதைக்கிறது. காவல்துறையினருக்கு ஆயுள் தண்டனை அச்சம் தராது. மரண தண்டனை விதிப்பதே சிறந்தது" எனக் கூறப்பட்டிருக்கிறது.

'எங்கு அதிகாரம் உள்ளதோ அங்கு பொறுப்பு இருக்க வேண்டும்' என்ற நீதிபதி

காவல்துறைக்கே களங்கம் ஏற்பட்டுள்ளது. இவர்களுக்கு குறைந்தபட்ச தண்டனை விதித்தால் , நீதிமன்றம் என்ன செய்யும் ஆயுள் தண்டனை தானே விதிக்கும் என ஏளனமாக நினைப்பார்கள். அச்சம் என்பது உண்மையான அச்சமாக இருக்க வேண்டும். ஆயுள் தண்டனை விதிப்பது போதுமானதாக இருக்காது என இந்த நீதிமன்றம் கருதுகிறது." என்றார்.

அதன் அடிப்படையில் முதல் குற்றவாளி ஆய்வாளர் ஸ்ரீதருக்கு மரண தண்டனையும், ரூ.15 லட்சம் அபராதமும்



விதிக்கப்பட்டிருக்கிறது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஆயுள்தண்டனையை விட மரண தண்டனையே...விதிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கான அபராதம் மட்டும் வேறுபாடு உள்ளது.

### மும்மொழிக் கொள்கை முதல் நிதி ஒதுக்கீடு வரை:

## பா.ஜ.க.விடம் கேள்வி எழுப்பிய மு.க.ஸ்டாலின்

சென்னை, ஏப். 7

தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது; தமிழ்நாட்டுக்கு வரும் மத்திய பா.ஜ.க. அமைச்சர்களும் & பா.ஜ.க. முதல்அமைச்சர்களும் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வார்களா?

தமிழ்மண்ணில் நின்று, "மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவோம்" என்று சொல்லி பரப்புரை செய்யத் தயாரா?

நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டுக்குத் தருவது எவ்வளவு? பா.ஜ.க.வால் ஆளப்படும் செல்லக்குழந்தை மாநிலங்களுக்குத் தருவது எவ்வளவு? வெளிப்படையாக அறிவிக்கத் தயாரா?

கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள் மீது தாக்குதல் தொடுக்கும் FCRA சட்டத்திருத்தத்தை முழுமையாகத் திரும்பப் பெறுவீர்களா அல்லது அடுத்த வாரமே நிறைவேற்றப் போகிறீர்களா?

இவற்றுக்கெல்லாம், பழனிசாமி தனது டெல்லி ஓனர்களிடம் பதில்பெற்றுத் தர முடியுமா?

கண்ணியமற்ற அவதூறுகளை வாந்தி எடுப்பதை விடுத்து, மக்களின் வாழ்வுரிமைப் பிரச்சினைகளை எப்போதுதான் பேசுவீர்கள்?

தமிழ்நாட்டைத் துண்டாட எத்தனை பேர் டெல்லியில் இருந்து படையெடுத்து வந்தாலும், தமிழ்நாடு தலைகுனியாது!

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும்!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




தின தமிழ்
நிருபர்கள் தேவை
வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200 – 70102 64701

## பாரதிய ஜனதா கட்சியின் 47ஆம் நிறுவன நாள் தொண்டர்களுக்கு மனமார்ந்த வாழ்த்து

### அண்ணாமலை தகவல்

சென்னை, ஏப். 7



தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது: நமது பாரதிய ஜனதா கட்சியின் 47வது நிறுவன தினத்தில், நமது கட்சியின் கொள்கைகளை நாடு முழுவதும் கொண்டு சென்ற ஒவ்வொரு தொண்டருக்கும் மனமார்ந்த வாழ்த்துகள். இன்று நாம் ஒரு அரசியல் கட்சியின் பிறப்பை மட்டுமல்ல உலகின் மிகப்பெரிய ஜனநாயக சக்தியாக சீராக வளர்ந்த ஒரு மாபெரும் இயக்கத்தையும் கொண்டாடுகிறோம்.

நமது வழிகாட்டிகளான டாக்டர் ஷ்யாமா பிரசாத் முகர்ஜி மற்றும் பண்டிட் தீனதயாள் உபாத்யாயா ஆகியோரால் விதைக்கப்பட்ட தேசமே முதன்மை, முழுமையான மனிதநேயம் மற்றும் அந்தியோதயம் ஆகிய அடிப்படை விதைகள் நமது பாதையை வழிநடத்த

அழகாக மலர்ந்துள்ளன. 1984ல் வெறும் 2 மக்களவைத் தொகுதிகளில் இருந்து உலகின் மிகப்பெரிய அரசியல் கட்சியாக வளர்ந்து மத்தியிலும் பல மாநிலங்களிலும் அரசாங்கங்களை வழிநடத்துவது வரை நமது தொண்டர்களின் வியர்வை, இரத்தம் மற்றும் அயராத உழைப்பு ஆகியவை பாஜக கட்சியின் இந்த புகழ்பெற்ற பத்தாண்டுகளுக்கு வழிவகுத்தன.

இன்று நமது மாண்புமிகு பிரதமர் நரேந்திரமோடி அவர்களின் தொலைநோக்குப் பார்வை கொண்ட தலைமையின் வழிகாட்டுதலில், நாம் இந்தியாவின் வளர்ச்சிக்கும் உலகளாவிய எழுச்சிக்கும் ஒரு தடுத்து நிறுத்த முடியாத இயந்திரமாகத் திகழ்கிறோம். இங்கே தமிழ்நாட்டில் நமது பாஜக தமிழ்நாடு தொண்டர்கள் 'தேசம் முதலில்' என்ற சித்தாந்தத்தை ஒவ்வொரு வீட்டு வாசலுக்கும் கொண்டு சேர்ப்பதற்காக ஒவ்வொரு நாளும் பெரும் சவால்களைத் துணிச்சலுடன் எதிர்கொள்கின்றனர். நமது தமிழ்நாடு முழுவதும் தாமரை மலர்ந்து பிரகாசிப்பதை உறுதிசெய்வதற்காக அனைத்து இடர்ப்பாடுகளையும் மீறி அயராது உழைக்கும் அடிமட்டப் போராளிகளுக்கு நாங்கள் வணக்கம் செலுத்துகிறோம்.

இந்த வரலாற்றுச்சிறப்புமிக்க நாளில் பொதுச்சேவைக்கான நமது அசைக்க முடியாத அர்ப்பணிப்பையும் 2047 ஆம் ஆண்டுக்குள் 'வளர்ந்த இந்தியா' என்ற மாபெரும் தொலைநோக்குப் பார்வையையும் மீண்டும் உறுதி செய்வோம். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் துரைமுருகனுக்கு ரூ.11.5 கோடி சொத்து உள்ளதாக வேட்புமனுவில் தகவல்

வேலூர், ஏப். 7



தமிழக சட்டசபை தேர்தல் வருகிற 23ம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 30ந்தேதி தொடங்கி இன்றுடன் நிறைவடைந்து உள்ளது. வேட்புமனு தாக்கல் செய்ய எட்டு நாட்கள் இருந்த நிலையில் அதில் நான்கு நாட்கள் விடுமுறை தினங்கள் இருந்ததால் இன்று ஏராளமான வேட்பாளர்கள் மனுதாக்கல் செய்தனர். கடைசி நாளான இன்று வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதியில் அமைச்சர் துரைமுருகன் வேட்புமனு தாக்கல் செய்துள்ளார்.

வேட்புமனு தாக்கல் செய்துள்ள அமைச்சர் துரைமுருகனுக்கு ரூ.11.5 கோடி அளவில் அசையும் மற்றும் அசையா சொத்து உள்ளதாக வேட்புமனுவில் தகவல் தெரிவித்துள்ளார். துரைமுருகன் அரை கிலோ தங்கம், ஒரு காரட் வைரம், 2கிலோ வெள்ளியும் வைத்திருக்கிறார். அவரது மனைவி சாந்தகுமாரி பெயரில் ரூ.59 கோடி சொத்து உள்ளதாகவும் வேட்புமனுவில் தெரிவித்துள்ளார்.

## "கோவை தெற்கு தொகுதியை பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்" செந்தில் பாலாஜி

கோவை, ஏப். 7



கோவை தெற்கு தொகுதியில் திமுகவின் வேட்பாளராக செந்தில் பாலாஜி போட்டியிடுகிறார். அங்கு செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது:

கரூரில் இருந்து கோவை தெற்கு தொகுதியில் ஆட்களை இறக்கி வேலை பார்த்து வருவதாக அதிமுக வேட்பாளர் அம்மன் அர்ஜுனன் குற்றம் சாட்டி வருவதாக செய்தியாளர்கள் கேள்வி எழுப்பினர். இதற்கு கரூரில் இருந்தும் ஆட்கள் இறக்கவில்லை, வேலூரில் இருந்தும் ஆட்களை இறக்கவில்லை. கோவையில் இருக்கும் ஒவ்வொரு கழக நிர்வாகிகளும் எங்களுக்கு கழகசிப்பாய்கள் போல வேலை செய்து வருகின்றனர்.

ஒவ்வொரு பூத் கமிட்டியிலும் திமுகவை சார்ந்த நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சிகளை சார்ந்த நிர்வாகிகள் திறம்பட பணிபுரிந்து வருகின்றனர். வெற்றியை உருவாக்கி தர கழக உறுப்பினர்கள் தயாராக இருக்கின்றனர். எனவே எங்களுக்கு வேறு இடத்தில் இருந்து ஆட்களை இறக்க வேண்டியதில்லை. இங்கு இருக்கும் 10 தொகுதிகள் மட்டுமல்ல இன்னும் பத்து தொகுதிகளில் கூட வெற்றி பெறும் தகுதி திமுகவிற்கு உள்ளது.

அதிமுக வேட்பாளரும் இந்த தொகுதியை சார்ந்தவர் அல்ல, அவரைப் போல நானும் வெளியூரை சேர்ந்தவன். அவர் ஏதாவது இந்த தொகுதிக்கு நல்லது செய்திருந்தால் அதை சொல்லி வாக்கு சேகரிக்கட்டும். நான் இந்த தொகுதிக்கு சாலை பணிகள் உட்பட அதிகமான திட்டங்களை அடிக்கல் நாட்டி நிறைவு செய்துள்ளேன். இந்த முறை திமுக தலைமையிலான கூட்டணி கண்டிப்பாக வெற்றி பெறும்.

இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

## அடுத்த தேர்தலில் குக்கர் கட்சி இருக்காது: கார்த்தி சிதம்பரம்

காரைக்குடி, ஏப். 7



காரைக்குடியில் காங்கிரஸ் வேட்பாளரை ஆதரித்து கார்த்தி சிதம்பரம் எம்.பி. பிரசாரம் செய்தார் அப்போது அவர் பேசியதாவது:

டிடிவி தினகரன் குக்கர் சின்னத்தில் நிற்கிறார். ஏற்கனவே இரண்டு முறை தேர்தலில் நின்று தோல்வியடைந்து விட்டார். இனி அடுத்த தேர்தலுக்கு அந்த குக்கர் கட்சியே இருக்காது. பாஜகவுடன் எந்த கட்சி கூட்டணி வைத்தாலும் அந்த கட்சியை பாஜக கடித்து குதறி சாப்பிட்டு விடும்.

தினகரன் எனக்கு நெருங்கிய நண்பர் தான், அவருக்கு இப்போதே சொல்லிக் கொள்கிறேன். அடுத்த தேர்தலில் குக்கர் தாமரையாக மாறிவிடும். பாஜக தமிழகத்தில் வந்துவிட்டால் இந்தியை திணிப்பார்கள். நமக்கு வேண்டாத விஷயங்களை புகுத்துவார்கள். பாஜகவின் நெருங்கிய அலுவலர்களை பதவியில் அமர்த்தி மறைமுகமாக ஆட்சி செய்வார்கள்.

அதிமுக முன்பு இருந்தது போல் இல்லை. கூட்டணி குறித்து ஏதும் பேச வேண்டுமானால் முன்பெல்லாம் டெல்லியில் இருந்து அதிமுக தலைமை அலுவலகத்திற்கு வருவார்கள், இல்லை ஜெயலலிதா வீட்டிற்கு வந்து பேசுவார்கள். ஆனால் இப்போது அதிமுக உட்கட்சியில் குழப்பம் ஏற்பட்டால் கூட அதுகுறித்து டெல்லியில் வைத்து தான் பேசுகிறார்கள். அதிமுகவிற்கு சுயமரியாதை இல்லை, தன்னிச்சையாக செயல்படவும் தெரியாது. ஆகவே அந்த கட்சியை ஒதுக்கி விட்டு அனைவரும் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்க வேண்டும் என்றார்.

இவ்வாறு அவர் பேசியுள்ளார்.

# ராஷ்டிரிய லோக் ஜனசக்தி கட்சி தமிழகத்தில் அதிமுகவுக்கு ஆதரவு



சென்னை, ஏப்ரல் 7,

ராஷ்ட்ரிய லோக் ஜன சக்தி கட்சியின் மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தேசிய செயல் தலைவர் பிரின்ஸ்ராஜ் தலைமையில் சென்னை அசோக்நகரில் நடைபெற்றது. இதில் 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழகத்தில் அதிமுகவிற்கு ஆதரவளிப்பதாக ராஷ்டிரிய லோக் ஜனசக்தி கட்சி அறிவித்துள்ளது .

தேசிய நிர்வாகிகளான ஜி.வி மணிமாறன், மகதாஃப் ஆலம், கிருஷ்ணன் ராஜ், யஷ்ராஜ், ஆகியோர் முன்னிலையிலும் மாநிலத் தலைவர் ஏ.பி.சசிக்குமார் ஏற்பாட்டில் நடைபெற்றது .

இக்கூட்டத்தில் நடைபெற உள்ள 2026 தமிழக சட்டமன்றத் தேர்தலில் ராஷ்ட்ரிய லோக் ஜனசக்தி கட்சியின் சார்பில் 4 தொகுதிகள் போட்டியிடுவது எனவும் மற்ற தொகுதிகளில் அதிமுகவிற்கு ஆதரவளிப்பதாக முடிவெடுத்து ள்ளனர்.

மேலும் புதிய நிர்வாகிகளுக்கான பதவி நியமன சான்றிதழை தேசிய செயல் தலைவர் மற்றும்தேசியநிர்வாகிகள் முன்னிலையில் மாநில தலைவர் டாக்டர் ஏ.பி . சசிகுமார் வழங்கினார் .

## திருப்பூர் வடக்கு தொகுதியில்

# அதிமுக வேட்பாளர் நடை பயிற்சி சென்றவர்களிடம் வாக்கு சேகரிப்பு



திருப்பூர்:ஏப்07

திருப்பூர்வடக்கு தொகுதியில் போட்டியிடும் அ.தி.மு.க.வேட்பாளர் எம் எஸ்எம் ஆனந்தன் காலை திருப்பூர் விளையாட்டு மற்றும் கல்வி அறக்கட்டளை வளாகத்திலும் நடை பயிற்சி மேற்கொண்டவர்களிடம் இரட்டை இலை சின்னத்திற்கு வாக்கு கேட்டு பிரச்சாரம் மேற்கொண்டார்.

திருப்பூர் விளையாட்டு மற்றும் கல்வி அறக்கட்டளை தலைவர் சி. சுப்பிரமணியம், துணை தலைவர் மயில்சாமி, செயலாளர் சுப்பிரமணியம், பொருளாளர் சன் பிளவர் பொன்னுச்சாமி மற்றும் நிர்வாக குழு உறுப்பினர்கள் வரவேற்றனர்.நிகழ்ச்சியில் வடக்கு தொகுதி எம்எல்ஏ கே.என் .விஜயகுமார், தொகுதி பொறுப்பாளரும்,மாநகர்மாவட்ட அவை தலைவருமான வி.பழனிசாமி, மாநகராட்சி முன்னாள் மேயர் அ. விசாலாட்சி (அமமுக) உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்..

## சுசீந்திரம்

# தாணுமாலய சுவாமி கோவில் தெப்ப திருவிழாவிற்காக கால் நாட்டு நிகழ்ச்சி



சுசீந்திரம்.ஏப்.7

தமிழ்நாட்டில் உள்ள பழமையான கோவில்களில் ஒன்றான தாணுமாலயசுவாமி கோவிலில் வருடம் தோறும் தெப்பத் திருவிழா கொடியேற்றத்துடன் தொடங்கி 10 நாட்கள் வெகு விமர்சையாக கொண்டாடப்படுவது வழக்கம் அதுபோல இந்த ஆண்டு தெப்பத் திருவிழா வருகின்ற ஏப்ரல் 27ஆம் தேதி நடைபெறுகிறதுஇதனைமுன்னிட்டு நேற்று காலை கோவிலில் முன்பு கால் நாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது தொடர்ந்து வருகின்ற 16ஆம் தேதி தெப்பத்திருவிழாவை சிறந்த முறையில் நடத்தித் தர ஊர் பெரியவர்களை அழைக்கும் மஞ்சள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது இதில் நிகழ்ச்சி நிரல் வெற்றிலை பாக்கு மஞ்சள் ஆகியவை வழங்கப்பட்டு

அவர்களை திருவிழாவிற்கு அழைக்கும் நிகழ்ச்சி ஆகும் தொடர்ந்து 18 ஆம் தேதி காலை கொடியேற்று நிகழ்ச்சி நடைபெறுகிறது அதனைத் தொடர்ந்து காலை மாலை வேளைகளில் சுவாமி அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் வைத்து வாகனப்பவனியும் கலை நிகழ்ச்சியும் நடைபெறும் வருகின்ற 26 ஆம் தேதி காலை 8.30 மணி அளவில் விநாயக தேர் அம்மன் தேர் சப்பர தேர் ஆகிய தேர்களை அலங்காரம் செய்து பக்தர்கள் தேரை வடம் தொட்டு இளுக்கும் தேரோட்ட நிகழ்ச்சி நடைபெறுகிறது 27ஆம் தேதி இரவு அலங்கரிக்கப்பட்ட தெப்பத்தில் சுவாமி அம்பாள் பெருமாள் ஆகியோரை அமரச் செய்து தெப்பக்குளத்தை மூன்று முறை வலம் வரும் தெப்பத் திருவிழாநிகழ்ச்சி நடைபெறுகிறது விழாவுக்கான ஏற்பாடுகளைகோவில்களில் இணை ஆணையர் ஜான் சிராணி கோவில் மேலாளர் ஆறுமுகதரன் கணக்கர் கண்ணன் தாணுமாலைய சுவாமி கோவில் பக்தர்கள் இணைந்து செய்து வருகின்றனர்

## விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில்

# புதிய தமிழகம் கட்சி சார்பில் வேட்புமனு தாக்கல்



விளாத்திகுளம் ஏப்ரல் 07.

தூத்துக்குடிமாவட்டம்விளாத்திகுளம்சட்டமன்றத் தொகுதி புதிய தமிழகம் கட்சி சார்பாக குளத்தூர் ராமச்சந்திராபுரத்தைச் சேர்ந்த வேட்பாளர் மாடசாமி தேர்தல்நடத்தும்அலுவலர்உஷாவிடம்வேட்புமனு தாக்கல் செய்தார். இதனைத் தொடர்ந்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வேட்புமனுவை பரிசீலனை செய்தனர். இந்த நிகழ்வில்ஒன்றிய செயலாளர்கள் உமையணன்,குமரன், ஜெயவீரன், விஜயகுமார், சிவசெல்வம், காமராஜ், நிர்வாகிகள் பெத்துராஜ், முனியசாமி, ஜேம்ஸ்,பெருமாள்,காளிதாஸ்உட்பட நிர்வாகிகள் பல கலந்து கொண்டனர்.



பவானி சாகர் அணை பகுதியில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான கந்தசாமி தலைமையில் விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது .



திருப்பத்தூர்மாவட்டம்வாணியம்பாடிஅடுத்ததும்பேரி ஏரிகொல்லி பகுதியில் அரசு மது பாட்டில்களை பதுக்கி வைத்து சட்டவிரோதமாக கூடுதல் விலைக்கு விற்பனை செய்து வந்த வெங்கடேசன் (வயது 31) என்பவர் கைது! அவரிடமிருந்து 750 மது பாட்டில்கள் பறிமுதல் மாவட்ட தனிப்படை காவல்துறையினர் நடவடிக்கை

## களியக்காவிளையில்

# விற்பனைக்காக மதுபானம் பதுக்கி வைத்திருந்தவர் கைது

களியக்காவிளை, ஏப்.7

களியக்காவிளைபோலீஸ்சிறப்புசப்இன்ஸ்பெக்டர் சுரேஷ்குமார்மற்றும்போலீசார்மார்க்கெட்ரோட்டில் நேற்று ரோந்து சென்று கொண்டு இருந்தனர். அப்போது ஸ்டாலின் ( 52 ) என்ற வாலிபர் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டு இருந்தார். அவரை பிடித்து விசாரித்ததில் அவரிடம் 180 மில்லி கொள்ளளவு உடைய 26 மது பாட்டில்கள் இருந்தது தெரிய வந்தது. அவரிடம் இருந்த மதுபாட்டில்களை பறிமுதல் செய்து அவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## திருப்பத்தூர்

# சட்டமன்றத் தொகுதி அமமுக வேட்பாளர் ஞானசேகர் வேட்பு மனு தாக்கல் செய்தார்




திருப்பத்தூர்:ஏப்:7

திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி அஇஅதிமுக கூட்டணியான அமமுக கட்சிக்கு சீட்டு ஒதுக்கிய நிலையில், அமமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் ஞானசேகர் கோட்டாட்சியர் தேர்தல் அலுவலர் வரதராஜனிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். மு.சட்டமன்ற உறுப்பினர் டி.கே. ராஜா குதிரைவண்டியில் வேட்பாளரை வாக்கு சேகரித்தபடி குதிரை வண்டியை ஓட்டி வந்தார். மேலும் அமமுக மற்றும் கூட்டணி பிரதிநிதிகளுடன் " குக்கர்" சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார்.




கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி (தனி) அஇஅதிமுக வேட்பாளர் T.M.தமிழ்ச்செல்வம் ஊத்தங்கரை வட்டாட்சியர்/ தேர்தல் அலுவலர் சிவக்குமாரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் கூட்டணி கட்சி பிரதிநிதிகள் பாஜக கிழக்கு மாவட்ட தலைவர் கவியரசு, மேனாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, பாமக மாநில தேர்தல் பணிக்குழு துணைத் தலைவர் வழக்கறிஞர் மூர்த்தி, அமமுக மாவட்ட செயலாளர் கணேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.



தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் அஇஅதிமுக வேட்பாளர் தென்காசி தெற்கு மாவட்ட கழக செயலாளர் செல்வமோகன்தாஸ் பாண்டியன் தேர்தல் நடத்தும் அலுவலர் சார் ஆட்சியர் வைஷ்ணவி பால் இடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார் உடன் தொகுதி பொறுப்பாளர் கழக மகளிரணி துணை செயலாளர் முன்னாள் அமைச்சருமான வி எம் ராஜலெட்சுமி, பாஜக மாவட்ட பொருளாளர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் கோதை மாரியப்பன், மாவட்ட இளைஞரணி செயலாளர் வழக்கறிஞர் கார்த்திக் குமார், அமமுக ஒன்றிய செயலாளர் முருகையா பாண்டியன் ஆகியோர் உள்ளனர்



திருப்பத்தூர்மாவட்டஆட்சியர்அலுவலகவளாகத்தில்,இந்தியதேர்தல்ஆணையத்தின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 டைபெறுவதையொட்டி, ஊடகச் சான்று மற்றும் கண்காணிப்பு குழு மையத்தை மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சியர் க.சிவசௌந்திரவல்லி பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டனர். உடன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) ஜெய்சங்கர், தேர்தல் வட்டாட்சியர் திருமலை மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.




தருமபுரி சட்டமன்ற தொகுதி தேசிய ஜனநாயக முற்போக்கு கூட்டணி சார்பில் தருமபுரி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சௌமியா அன்புமணி தனது கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தொண்டர்கள் ஆகியோருடன் ஊர்வலமாக வந்து தருமபுரியில் உள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் காயத்ரி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்புமனுதாக்கல்செய்தார்.இதில்பாமகமாவட்டசெயலாளர்எஸ்.பி.வெங்கடேஸ்வரன், பாஜக மாவட்ட செயலாளர் சரவணன், அதிமுக நகரச் செயலாளர் பூக்கடை ரவி, நல்லம்பள்ளி ஒன்றிய செயலாளர் சிவபிரகாசம் ஆகியோர் உடனிருந்தனர்.



தருமபுரி மாவட்டம் பென்னாகரம் சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் ஜி.கே.எம்.தமிழ்குமரன் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் ஊர்வலமாக வந்து பென்னாகரத்தில் உள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். திமுக வர்த்தகர் அணி மாநில துணை செயலாளர் தர்மச்செல்வன், காங்கிரஸ் மாவட்ட தலைவர் கோவி.சிற்றரசு, சிபிஎம் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வி.மாதன், சிபிஐ மாவட்ட செயலாளர் எஸ் கலைச்செல்வம், விசிக மாவட்ட செயலாளர் கருப்பண்ணன் ஆகியோர் உடனிருந்தனர்.

# பண பட்டுவாடா தடுக்க வாகன சோதனை தீவிரம்



தஞ்சாவூர் ஏப்ரல் 7.

தேர்தலை முன்னிட்டு வாக்குச்சாவடிகளை தயார்படுத்தும் பணி ஒருபுறம் தீவிரமாக நடந்து வருகிறது ,அதே நேரத்தில் வாக்காளர்களுக்கு ஓட்டுக்காக பணம் பொருள்கள் விநியோகம் செய் தல் போன்ற முறைகேடுகளை தடுக்க தேர்தல்ஆணையம்முனைப்பு காட்டி வருகிறது .தஞ்சாவூர் மாவட்டத்தில் 8 தொகுதிகள் உள்ளன , இந்த தொகுதிகளில் வாக்காளர்களுக்கு கொடுப்பதற்கான பணம் பரிசுப்பொருள் வாகனங்களில் கொண்டு செல்லப் படுகிறதா? என்பதை கண்காணித்து நடவடிக்கை எடுக்க பறக்கும் படையினர், நிலையான கண்காணிப்பு குழுவினரை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது இவர்கள் வாகன சோதனை தீவிரமாக நடத்தி வருகிறார்கள் ரூபாய் 50 ஆயிரத்துக்கு மேல் பணம் எடுத்துச் சென்றாலோ, உரிய ஆவணங்கள் இன்றி அதிக அளவில் நகை ,பரிசு பொருட்களை எடுத் துச் சென்றாலோ, அதிகாரிகள் பறிமுதல் செய்து வரு கின்றனர். இந்த நிலையில் வாகன சோதனையில் ஈடுபடும் பறக்கும் படையினர் மற்றும் நிலை யான கண்காணிப்பு குழுவினையும் கண்காணிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அதன்படி பறக்கும் படை ,நிலையான கண்காணிப்பு குழு வின் வாகனங்கள்ஜி.பி.எஸ். மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள தேர்த ல் கட்டுப்பாட்டு அறையில் இருந்து இந்த கண்காணிப்பு பணி நடந்து வருகிற து .இந்த பணிகளை மாவட்ட கலெக்டர் பிரியங்கா பங்கஜம் பார்வையிட்டு, ஆய் வு செய்து வருகிறார்

## குளச்சலில் மது பாட்டியில் விபரீதம்

# 3வது மாடியில் இருந்து விழுந்த 2 வாலிபர்கள்

## 4 பேர் கைது

குளச்சல், ஏப்.7

குளச்சல் அருகே கொட்டில்பாடு பகுதியை சேர்ந்தவர் அலெக்ஸ் ஷோபன் மகன் ராகுல் (20 ). மீன்பிடித் தொழில் செய்து வருகிறார். அதே பகுதியை சேர்ந்த ஆரோக்கிய மினிஸ்டன் ( 20 ) இவர்கள் நண்பர்கள். இவர்கள் ஈஸ்டர் பண்டிகை முன்னிட்டு மது பார்ட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். இதற்காக குளச்சல் பயணியர் விடுதி சந்திப்பு அருகே உள்ள ஒரு தனியார் விடுதியில் அறை எடுத்திருந்தனர்.

இதை அடுத்து இரவு ராகுல் அவரது தம்பி சோகித் ( 18, ஆரோக்கிய மினிஸ்டன், அபிஷேக் (20), அபித் ( 21), ஸ்டாலின் (19) அனி (22) மற்றும் 17 வயது சிறுவன் உட்பட 10 பேர் மது பார்ட்டி ml் கலந்து கொண்டனர். நள்ளிரவு அவர்கள் போதையில் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது ராகுல் மீன்பிடிக்க செல்லும் விசைப்படகு ஓட்டுநர் விஷாலை குறித்து அபிஷேக் தப்பாக பேசி உள்ளார். இதனால் அவர்களிடையே வாய் தகராறு ஏற்பட்டு கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதில் ஆத்திரம் அடைந்த ஆரோக்கிய மினிஸ்டன் சோகித்தை அடித்ததாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தில் அவர்களுக்குள் மாறி மாறி தகராறு ஏற்பட்டுள்ளது. இதனால் ஆத்திரம் அடைந்த அபிஷேக் பீர் பாட்டிலை உடைத்து சோகித்தை குத்துவதற்கு பாய்ந்து உள்ளார். இதிலிருந்து தற்போது ஒருக்காக சோகித் போதையில் தரைத்தளம்எனநினைத்து ஜன்னலை திறந்து வெளியேற முயற்சித்துக் குதித்துள்ளார். இதனால் 60 அடி பள்ளத்தில் கீழே விழுந்துள்ளார். அவரை தொடர்ந்து ஆரோக்கிய மினிஸ்டனும் பின்தொடர்ந்து ஜன்னல் வழியாக குதித்துள்ளார். நள்ளிரவு ஆனதால் பலத்த காயத்துடன் மயங்கி கிடந்தனர். இதை யாரும் கவனிக்கவில்லை. மறுநாள் காலை குளச்சல் போலீசர் தகவல் அறிந்து ஆரோக்கிய மினிஸ்டன், சோபித் ஆகிய இரண்டு பேரை மீட்டு நாகர்கோவில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தனர். அவர்கள் 2 பேரும் மருத்துவமனையில் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக ராகுல் குளச்சல் போலீசில் புகார் அளித்தார். போலீசார் அபித், ஸ்டாலின் ஏனோஸ், அனீஸ் மற்றும் 17 வயது சிறுவன் என 4பேரை கைது செய்தனர். மேலும் விசாரணை நடைபெற்று வருகிறது.

# அதிமுக துணை பொதுச்செயலாளர் கே.பி.முனுசாமி சொந்த தொகுதி மக்களால் நிராகரிக்கப்பட்டவர்

## வேப்பனஹள்ளி தொகுதி திமுக வேட்பாளர் பி.எஸ்.சீனிவாசன் குற்றச்சாட்டு



கிருஷ்ணகிரி ஏப்7:

கிருஷ்ணகிரி மாவட்டம் வேப்பனஹள்ளி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக திமுக சார்பில் பாத்தகோட்டா பி.எஸ். சீனிவாசன் தேர்தல் அலுவலர் கீதாராணியிடம் சூளகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் வேட்பு மனு தாக்கல் செய்தார். கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட திமுக செயலாளர் ஓசூர் சட்டமன்ற உறுப்பினருமான ஒய்.பிரகாஷ், நாடாளுமன்ற உறுப்பினர் கோபிநாத், மாவட்டத்துணைத்தலைவர் முருகன், தேமுதிக மாவட்ட செயலாளர் எஸ்.எம்.முருகேசன், மற்றும் கூட்டணி கட்சியினர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். முன்னதாக சூளகிரியில் திமுக தேர்தல் அலுவல திலிருந்து ஆயிரக்கணக்கான திமுக தொண்டர்கள், வேட்பாளர் சீனிவாசனை வரவேற்றுபட்டாசுவெடித்து மேலதாளம் முழங்க சூளகிரி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு ஊர்வலமாக வந்தனர். இவர்களுடன் காங்கிரஸ், தேமுதிக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உள்ளிட்ட பல்வேறு கூட்டணி கட்சியை சேர்ந்த ஆயிரக்கணக்கான தொண்டர்கள் உற்சாக வெள்ளத்தில் ஊர்வலமாக வந்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய வேட்பாளர் பி.எஸ். சீனிவாசன், நான் இந்த தொகுதியை சேர்ந்தவன் என்பதால் அனைத்து பிரச்சினைகளையும் நன்கு அறிந்தவன் என்ற முறையில் பொதுமக்களுக்கு அயராது உழைத்திடுவேன் என கூறினார். அதிமுக துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி சொந்த தொகுதியில் நிற்காமல் இந்த தொகுதியில் என்னை எதிர்த்து போட்டியிடுகிறார். சொந்த தொகுதி மக்களால் நிராகரிக்க ப்பட்டவர் தான் அவர் என்றும், சென்ற முறை பொய் வாக்குறுதியை கொடுத்து மக்களை ஏமாற்றி வெற்றி பெற்றவர் இந்த முறை வேப்பனப்பள்ளி தொகுதிமக்களைஏமாற்ற முடியாது என தெரிவித்தார்.



தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி இந்தியா கூட்டணி கட்சியின் திமுக வேட்பாளர் டாக்டர் கலை கதிரவன் தேர்தல் நடத்தும் அலுவலர் சார் ஆட்சியர் வைஷ்ணவி பால் இடம் தனது வேட்புமனுவை தாக்கல் செய்தார் உடன் தென்காசி தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன், தென்காசி சட்டமன்ற உறுப்பினர் பழனி நாடார் ஆகியோர் உள்ளனர்.




சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் இளங்கோவன் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுடன் ஊர்வலமாக வந்து அண்ணா சிலை, பெரியார் சிலை, அம்பேத்கர் சிலைகளுக்கு மாலை அணிவித்தார். இதை தொடர்ந்து தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் காயத்ரி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். தேமுதிக மாவட்ட செயலாளர் குமார் , நகர செயலாளர் சுரேஷ் ,திமுக நகர செயலாளர்கள் நாட்டான்மாது,கௌதம்,விசிகமாவட்டசெயலாளர்பாண்டியன்ஆகியோர்உடனிருந்தனர்




தருமபுரி சட்டமன்ற தொகுதி டாக்டர் ராமதாஸ் பாமக சார்பில் தருமபுரி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் சரவணன் தனது ஆதரவாளர்களுடன் ஊர்வலமாக வந்து தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் காயத்ரி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். பாமக நிர்வாகிகள் உடனிருந்தனர்.




தருமபுரி சட்டமன்றத் தொகுதி தமிழக வெற்றி கழகம் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் எம். சிவம் தனது கட்சியின் நிர்வாகிகளுடன் ஊர்வலமாக வந்து தருமபுரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் காயத்ரி தேர்தல் நடத்தும் அலுவலரிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். கட்சியின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.




திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கவிதா தண்டபாணி நாட்றம்பள்ளியில் தேர்தல் நடத்தும் அலுவலர் முருகேசனிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார். உடன் விசிக மாவட்ட செயலாளர் கோகுல் அமர்நாத் மற்றும் கூட்டணி கட்சி பிரதிநிதிகள் இருந்தனர்.




திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திண்டுக்கல் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட ஐ.பி. செந்தில்குமார் இன்று தேர்தல் வேட்பாளர் மனுவை தேர்தல் அலுவலரிடம் தாக்கல் செய்தார். விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் மைதீன் பாவா, மறுமலர்ச்சி திராவிட கழக மாவட்டச் செயலாளர் செல்வராகவன் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் எம்எல்ஏ பாலபாரதி உடன் இருந்தனர்

## கூட்டணி கட்சியினருடன் ஊர்வலமாக வந்து

# அதிமுக வேட்பாளர் டி.எம்.தமிழ்செல்வம் வேட்புமனு தாக்கல்




கிருஷ்ணகிரி, ஏப். 7

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை சட்டமன்றத் தொகுதி (தனி) அதிமுக சார்பில் போட்டியிடும் வேட்பாளர் டி.எம். தமிழ்செல்வம், நேற்று தனது கூட்டணி கட்சியினருடன் சேர்ந்து தேர்தல் நடத்தும் அலுவலரிடம் முறைப்படி வேட்புமனுவை தாக்கல் செய்தார்.

இதனை முன்னிட்டு, ஊத்தங்கரையில் உள்ள புகழ்பெற்ற முனியப்பன் கோவில் வளாகத்தில் கூட்டணி கட்சியினர் மற்றும் தொண்டர்கள் திரளாக ஒன்று கூடி, வேட்பாளர் தமிழ்செல்வம் தலைமையில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. அதனைத் தொடர்ந்து, ஊத்தங்கரை நான்கு முனை சந்திப்பில் அமைந்துள்ள மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர், தேர்தல் நடத்தை விதிகளின்படி காவல்துறையின் அனுமதியுடன் ஊத்தங்கரை ரவுண்டானா பகுதியில் இருந்து ஊர்வலம் தொடங்கப்பட்டது. இதில் அதிமுக, பாஜக, அமமுக, பாமக மற்றும் தமாகா உள்ளிட்ட கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் ஏராளமான தொண்டர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

# திருச்சி: ரயிலில் சிக்கிய 10 கிலோ கஞ்சா



திருச்சி, ஏப். 7

புவனேஸ்வரில் இருந்து ராமேஸ்வரம் செல்லும் ரயிலில் திருச்சி ரயில் நிலையத்தில் இருப்புப் பாதை போலீசார் சோதனை நடத்தினர். அப்போது, ஒரு பொதுப்பெட்டியில் கேட்பாரற்று கிடந்த பார்சலைத் திறந்து பார்த்தபோது, அதில் சுமார் 10 கிலோ கஞ்சா இருந்தது கண்டறியப்பட்டது. இதன் மதிப்பு சுமார் 5 லட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. கஞ்சாவைப் பறிமுதல் செய்த இருப்புப் பாதை போலீசார், விசாரணைக்குப் பிறகு போதை நுண்ணறிவுப் பிரிவிடம் ஒப்படைத்தனர்.

# திருச்சி அரசு மருத்துவமனையில் கர்ப்பிணி பெண் மாயம்



திருச்சி, ஏப். 7

திருச்சி மாவட்டம் மணப்பாறையைச் சேர்ந்த மதியழகன் மனைவி திவ்யா (27), மனநலம் பாதிக்கப்பட்ட கர்ப்பிணி. திருச்சி மகாத்மா காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இவர், வார்டில் இருந்து வெளியே சென்றவர் மீண்டும் திரும்பவில்லை. பல இடங்களில் தேடியும் கிடைக்காததால், கணவர் அளித்த புகாரின் பேரில் அரசு மருத்துவமனை போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்

# வாசிப்பை நேசிப்போம் மாணாக்கர்களின் தனித் திறன் ஊக்குவிப்பு தேர்வு

## வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதங்கங்கள் வழங்கி கௌரவிப்பு




தேனி, ஏப். 7

தேனி மாவட்டம் பெரிய குளத்தில் ஜெ அகாடமி, வேவ்ஸ் பவுன்டேசன் மற்றும் பெரியகுளம் கோல்டு அரிமா சங்கத்தின் சார்பில் மாணாக்கர்களின் கல்வித் திறனை ஊக்குவிக்கும் வகையில் "வாசிப்பை நேசிப்போம்" எனும் தலைப்பில் கல்வி நிகழ்ச்சி நடைபெற்றது. 1ம் வகுப்பு முதல் 10 வகுப்பு வரையிலான மாணாக்கர்கள் கலந்து கொண்டனர். மாணவர்களிடையே வாசிப்பு திறன், மற்றும் எழுத்துத் திறன் கண்டறிந்து அவர்களை ஊக்குவிக்கும் வகையில் வாசிப்பு மற்றும் எழுத்துத் தேர்வு நடத்தப்பட்டது. போட்டியில் வெற்றி பெற்ற மாணாக்கர்களுக்கு பதக்கம் மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்நிகழ்வில் ஜெ அகடமி நிறுவனர் சித்ரா ஜெகன் , வேவ்ஸ் அறக்கட்டளை செயலர் ஜோதி, பெரியகுளம் அரிமா கோல்டு தலைவர் பாண்டியன் பக்கிரி முகமது , செயலர் பொறியாளர் ஜெகன், இயக்குநர் ஆசிரியர் டேவிட், மூத்த அரிமாக்கள் பழனிராஜகோபால், முத்து இருளப்பன், மாவட்ட தலைவர் பொறியாளர் ராமநாதன், பொறியாளர் நித்யானந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## குமரியில்

# 4 தொகுதிகளுக்கான வேட்புமனுதாக்கல் செய்யும் அலுவலகங்கள்: மாவட்ட ஆட்சியர் ஆய்வு




நாகர்கோவில், ஏப்.7

சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, நாகர்கோவில், பத்மநாபபுரம், விளவங்கோடு, குளச்சல் ஆகிய சட்டமன்றத் தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர்அலுவலகத்தில்வேட்புமனுதாக்கல்பணிகளை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அழகுமீனா நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் கூறியதாவது:

இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலின் படி, வேட்புமனு தாக்கல் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கு தோவாளை(இ) பூதப்பாண்டி வட்டாட்சியர் அலுவலகத்திலும், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்திலும், குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கு குருந்தன்கோடு வட்டார வளர்ச்சி அலுவலகத்திலும், பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதிக்கு பத்மநாபபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்திலும், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கு விளவங்கோடு வட்டாட்சியர் அலுவலகத்திலும், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்கு கிள்ளியூர்வட்டாட்சியர்அலுவலகங்களிலும் பெறப்பட்டு வருகின்றன. வேட்புமனு தாக்கல் காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை நடைபெற்று வருகிறது. இன்று 06.04.2025 வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாளாகும். வேட்பாளர்கள் மனு தாக்கல் செய்ய வரும்போது பின்பற்றப்பட வேண்டிய விதிமுறைகள் மற்றும் அதற்கான அறையில் மேற்கொள்ளப்பட்டுள்ள வசதிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

வேட்புமனு தாக்கலின் போது அலுவலகத்தைச் சுற்றி மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்புப் பணிகள் மற்றும் கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடுகள் குறித்தும், தேர்தல் ஆணையத்தின் வழிகாட்டுதலின்படி, வேட்பாளருடன் அனுமதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை மற்றும் வாகனக் கட்டுப்பாடு குறித்தும் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் கேட்டறியப்பட்டது. என கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் அலுவலர் மற்றும் பத்மநாபபுரம் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலர் எஸ்.காளீஸ்வரி, குளச்சல் சட்டமன்றதொகுதிதேர்தல்நடத்தும்அலுவலர்கலைமதி, விளவங்கோடு சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் செந்தூர் ராஜன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வட்டாட்சியர்கள் துறை அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

## திருச்சி

# கவுன்சிலர் கொலை வழக்கில் 11 பேர் கைது



திருச்சி, ஏப். 7

திருச்சி திருவரம்பூர் அருகே டாஸ்மாக் கடை பார் உரிமையாளரும், முன்னாள் பேரூராட்சி கவுன்சிலருமான ரஞ்சித் குமார் கடந்த மாதம் 30 ஆம் தேதி மர்ம நபர்களால் வெட்டி படுகொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக போலீசார் வழக்குப்பதிந்து விசாரணை மேற்கொண்டனர். சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்ததில், கொலை சம்பவத்தில் ஈடுபட்ட சரித்திர பதிவேடு ரவுடி தினேஷ்குமாரக் என்கிற பாட்டில்மணி உட்பட 11 பேரை போலீசார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

## மலை பகுதியில் தேனிக்கள் கொட்டியதால்

# மயங்கிய பெண்ணை மீட்ட தீயணைப்புத்துறையினர்



தக்கலை, ஏப்.7

தக்கலை அருகே பெருஞ்சிலம்பு அருகே பன்னிப்பொத்தையில் உள்ள மலை பகுதியில் தொழிலாளர்கள் ரப்பர் மரம் வெட்டும் தொழிலில் நேற்று ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கே கூடு கட்டியிருந்த மலை தேனிக்கள் திடீரென கலைந்து தொழிலாளர்களை கடுமையாகதாக்கியது. இதில் சில தொழிலாளர்கள் காயத்துடன் தப்பிய நிலையில், அவர்களுக்கு சமையல் செய்து கொடுக்க சென்ற பாமா ( 52) என்ற பெண்ணை மலைத் தேனிக்கள் பயங்கரமாக கொட்டியதில் மயக்கமடைந்தார். மயங்கிய பெண்மணியை மீட்க தொழிலாளர்கள் முயன்றும் தேனிக்களின் கொடூர தாக்குதலை சமாளிக்க முடியாமல் தவித்தனர். இதையடுத்து தக்கலை தீயணைப் புத்துறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. தீயணைப்பு நிலைய அலுவலர் ஜீவன்ஸ் உத்தரவின் பேரில், தீயணைப் புத்துறை மீட்பு குழுவினர் விரைந்து பன்னிபொத்தையில் சுமார் 3 கிலோமீட்டர் தூரம் மலைஏறி சம்பவ இடத்திற்கு சென்றனர்.

பின்னர் நெருப்பு புகை மூட்டி மலைத்தேனிக்களை விரட்டி, மயக்கநிலையில் இருந்த பெண்மணியை மீட்ட தீயணைப்பு வீரர்கள், அப்பெண்ணை சுமந்து, அங்கிருந்த கனரக வாகனத்தில் வைத்து கீழே கொண்டுவந்தனர்.

பின்னர் தயார் நிலையில் இருந்த தக்கலை தனியார் ஆம்புலன்ஸில் அப்பெண்ணை ஏற்றி பொதுமக்கள் உதவியுடன் தீணையப்புத்துறை மீட்பு குழுவினர் குமாரபுரம் தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு தீவிர சிகிட்சையளிக்கப்படுகிறது.

## குளச்சலில்

# இயற்கை பொருட்கள் மற்றும் பழவகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சி



நாகர்கோவில், ஏப்.7

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குளச்சல் காமராஜர் பேருந்துநிலையத்தில் மகளிர் திட்டத்தின் சார்பில் இயற்கை பொருட்கள் மற்றும் பழவகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சி நடைபெற்றது. இதில் சுய உதவிக்குழுவினர் இணைந்து வெற்றிலை, வாழை இலை, பழம், தென்னங்கீற்று, தேங்காய் பிஞ்சு, சிப்பி, சங்கு, புளியமுத்து, மர சீனிகிழங்கு வற்றல், மாதுழை, திராட்சை, ஆரஞ்சு, தர்பூசணி உள்ளிட்ட பொருட்களை கொண்டு, 100 சதவீதம் வாக்கு தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள், படங்கள், பாதகைகள், தோரணங்கள் தயாரிக்கப்பட்டு பொதுமக்களின் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டு, விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும் பேருந்துநிலையத்தில் உள்ள 85 வயதுக்கு மேற்பட்ட வாக்காளர்கள் மத்தியில் கேக், ஊட்டியதோடு, அவர்கள்தவறாமல்வரும் ஏப்ரல் 23ம் அன்று வாக்களிக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது. தொடர்ந்து பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளுக்கு தேர்தல் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா துவக்கி வைத்தார். மகளிர் திட்ட இயக்குநர் பத்ஹூ முகம்மது நசீர், உதவி திட்ட இயக்குநர்கள் கலைசெல்வி, .வளர்மதி, மகளிர் சுய உதவி குழுவினர், துறை அலுவலர்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்.

# மகளிர் ஆதரவோடு மீண்டும் தொகுதியில் வெல்வேன் : மதியழகன் எம்.எல்.ஏ., உறுதி



கிருஷ்ணகிரி, ஏப். 7

பர்கூர்சட்டசபைதொகுதியில், மகளிர் ஆதரவுடன் மீண்டும் வெல்வேன், முதல்வராக மீண்டும் ஸ்டாலின் பதவியேற்பார், என மதியழகன் எம்.எல்.ஏ., பேசினார்.

பர்கூர்சட்டசபைதொகுதிக்குட்பட்ட புளியம்பட்டி, குண்டனூர் கள்ளியூர், பாப்பாரப்பட்டி, வாடமங்கலம்கூட்ரோடு, வெப்பாலம்பட்டி, பெருகோபனப்பள்ளி, சந்தூர் உள்பட, 40 கிராமங்களில் நேற்று கிருஷ்ணகிரி, தி.மு.க.,கிழக்குமாவட்ட செயலாளரும், பர்கூர் சட்டசபை தொகுதி வேட்பாளருமான மதியழகன் எம்.எல்.ஏ., பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் பேசியதாவது: கடந்த, 5 ஆண்டுகளில்முதல்வர்ஸ்டாலின் மகளிர் விடியல் பயணம், உரிமைத்தொகை, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன், அன்பு கரங்கள் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செய்துள்ளார். குறிப்பாக பெண்களுக்கு, 5 ஆண்டுகளில் செய்த திட்டங்கள் தாராளம். வரும், தி.மு.க., '2.ஓ' ஆட்சியில் மகளிர் உரிமைத்தொகை, 2,000 ரூபாயாக உயர்த்தப்படும். 8,000 ரூபாய் கூப்பன் வழங்கப்படும். அதில்உங்களுக்குதேவையான பொருட்களை நீங்களே வாங்கி கொள்ளலாம். நாங்கள் செய்த சாதனைகளை சொல்லி ஓட்டு கேட்கிறோம். அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., மக்களிடம் ஓட்டு வாங்காமலேயே நான்கு வருடம் முதல்வராக பதவி வகித்தவர். அவருக்கு மக்கள் நலனில் எந்த அக்கறையும் இல்லை. மத்திய பா.ஜ.க, அரசின் அடிமையாகவே அ.தி.மு.க., இருந்து வருகிறது. அவர்களை மக்கள் புறந்தள்ள வேண்டும். யார் முதல்வராக வர வேண்டும், யார் வந்தால் திட்டங்கள் நமக்கு கிடைக்கிறது என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும். 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற வகையில் செயல்படும், தி.மு.க., மற்றும் கூட்டணி கட்சிகளை ஆதரித்து பெருவாரியான ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும். தமிழகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் மீண்டும் ஆட்சி அமைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனபேசினார்.



சாமி தோப்பு ஊராட்சியில் வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி தென்தாமரைகுளம்., ஏப். 6. சாமி தோப்பு ஊராட்சிக்கு உட்பட்ட செட்டிவிளை கிராமத்தில் ஏப்ரல் 23 ல் நடைபெற உள்ள சட்டமன்றத் தேர்தலில் 100% வாக்களிக்க வேண்டி பேரணி, வாக்காளர் உறுதி மொழி எடுக்கப்பட்டது. மேலும் அனைத்து வாக்காளர் வீடுகளுக்கும் சென்று தாம்பூல தட்டில் வைத்து விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மண்டல துணைவட்டாரவளர்ச்சி அலுவலர் வேல்முருகன், ஊராட்சி செயலர் காளியப்பன், மகளிர் திட்ட பொறுப்பாளர் சந்திரா, குழு கூட்டமைப்பு தலைவர் பொன்செல்வி, செயலாளர் ஜெய பார்வதி, இணை செயலர் செல்வராணி உள்பட பலர் கலந்து கொண்டனர்

# இந்தியாவில் பா.ஜன தாவை எதிர்த்து கேள்வி கேட்கும் ஒரே இயக்கம் திமுக

## தஞ்சாவூரில் உதயநிதி ஸ்டாலின் பேச்சு



தஞ்சாவூர் ஏப்ரல் 7

இந்தியாவில் பா.ஜனதாவை எதிர்த்து கேள்வி கேட்கும் ஒரே இயக்கம் திமுக தான் என்று உதயநிதி ஸ்டாலின் பேசினார். தஞ்சாவூர் தொகுதி திமுக வேட்பாளர் சண். ராமநாதனை ஆதரித்து துணை முதலமைச்சர் உதய நிதி ஸ்டாலின் தஞ்சாவூர் பழைய பஸ் நிலையம் அண்ணா சிலை அருகே பிரச்சாரம் செய்தார். அப்போது அவர் பேசியதாவது: தஞ்சாவூர் மாவட்டம் எப்போதும் திமுக கோட்டை, இந்த ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம் தான் நமது தலைவர் கருணாநிதி கொடுத் த மாவட்டம் 1962ல் கருணாநிதி இந்த தஞ்சாவூர் மண்ணில் இருந்து தான் முதன் முதலாக வெற்றி பெற்றார் .நானும் ஒரு டெல்டா காரன் தான் என்று கருணா நிதி பெருமையாக சொல்வார் இன்றைக்கு அதே பெருமை யோடு நானும் ஒரு டெல்டா காரன் என்கின்ற உரிமையோடு உங்களை எல்லாம் சந்திக்க வந்திருக் கின்றேன் தஞ்சாவூர் தொகுதி வேட்பாளர் சண். ராமநாதன் கட்சிப் பணி, மக்கள் பணி எதுவாக இருந்தாலு ம் ,அது இரண்டிலும் சிறப்பாக செயல் படுத்தியவர் அவரு டைய நிர்வாக திறமையால் தமிழ்நாடு அளவில் சிறந்த மாநகராட்சிக்கான முதல் இடத்திலும், இந்திய அளவில் 13 வது இடமும் தஞ்சை மாநகராட்சி பெற்றுக் கொடுத்தது அவரை மிகப் பெரிய வாக்கு வித்தியாசத் தில் ஜெயிக்க வைக் க குறைந் தது 50 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் ஜெயிக்க வைக்க வேண்டும் கல்லூரி மாணவர் களுக்கு மடிக்கணி னி வழங்கும் திட்டம் குறித்து அதிமுக பொய் பிரச்சாரம் செய்கிறது என்ற தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அண்மை யில் கல்லூரி மாண வ மாணவி கள் 10 லட்சம் பேருக்கு இலவச மடிக்கணினி வழங்கப்பட்டது இதை வைத்து அதிமுகவினர் ஒரு பொய் பிரச்சாரத்தை செய்கின்றனர் மடிக்கணினி வழங் கும் திட் டத்தை அதிமுக கொண்டு வந்ததாகவும் அதை நாம் முடக்கி விட்ட தாகவும் கூறுகின் றனர் .ஆனால் அதிமுக ஆட்சியில் மடிக்கணினி பள்ளி யில் படிக் கும் மாணவர்களுக்கு தான் கொடுத்த னர் .திட்டத்தை அதிமுக ஆட்சியில் இருக்கும் போது 2019 ஆம் ஆண்டில் கைவிட்டனர். கல்லூரி மாணவ மாணவிக ளுக்கு மடிக்கணினி கொடுத்தால் வேலை தேடுவதற்கும், மேல் படிப்பு படிக்கும் போது பயன் தரும் என்பதால் பள்ளி மாணவர்களை விட கல்லூரி மாணவ மாணவிகளுக்கு வழங்க முதல்வர் முடிவு செய்தார் இதன்படி கல்லூரி யில் படிக்கும் 10 லட்சம் மாணவ மாணவிக்கு மடிக்க ணினி வழங்கப்பட்டது .இதே போல் பல்வேறு திட்டங்கள் திமுக அரசு நிறை வேற்றி உள்ளது நாம் இவ்வளவு திட்டங்க ளை நிறைவேற்றி உள்ளோம் .ஆனால் தமிழ்நாட்டுக்கு கேட்கிற நிதியை மத்திய அரசு தருவ தில்லை தமிழ் நாட்டை மத்திய அரசு புறக்கணித்து வருகிறது. அப்படி ப்பட்ட பாஜகவை தமிழ்நாடு புறக் கணி த்து காட்ட வேண்டும் என்றார் உதயநிதி ஸ்டாலின்

# நாகர்கோவில் மாநகராட்சி பொறுப்பு மேயரானார் மேரி பிரின்ஸி லதா

## மாமன்ற உறுப்பினர் வாழ்த்து





நாகர்கோவில்,ஏப். 7

நாகர்கோவில் மாநகராட்சியின் மேயர் ராஜினாமா செய்ததை தொடர்ந்து துணை மேயர் மேரி பிரின்ஸி லதா பொறுப்பு மேயரானார்.

நாகர்கோவில் மாநகராட்சி மேயராக இருந்து வந்த மகேஷ் கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக போட்டியிடுவதால் கடந்த ஏப்ரல் 1ம் தேதி அவர் தனது மேயர் பதவி மற்றும் 4வது வார்டு மாமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்தார். இந்நிலையில் அந்த மேயர் பதவி காலியாக இருந்து வந்ததை அடுத்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டதின் படி, நேற்று காலை நாகர்கோவில் மாநகராட்சியில் சிறப்பு மாமன்ற கூட்டம் நடத்தப்பட்டது. இதில் மேயர் மகேஷ்ன் ராஜினாமா மன்ற கூட்டத்தில் முன்வைக்கப்பட்டு பதிவுசெய்யப்பட்டது. இதன் மூலம் அவரின் ராஜினாமா சட்டப்படி அமலுக்கு வந்தது.

எனவே காலியாக இருக்கும் மேயர் பதவியை துணை மேயர் பொறுப்பு மேயராக பதவி ஏற்க வேண்டும், இதைத் தொடர்ந்து துணை மேயராக இருந்து வந்த மேரி பிரின்ஸி லதாவுக்கு மாநகராட்சி அலுவலகத்தில் வைத்து நேற்றைய தினம் ஆணையர் நிஷாந்த் கிருஷ்ணா பொறுப்புகளை வழங்கினார்.

இதனைத் தொடர்ந்து நாகர்கோவில் மாநகராட்சியின் முதல் பெண் பொறுப்பு மேராக மேரி பிரின்ஸி லதா பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வில் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள், ஊழியர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு பொறுப்பு மேயருக்கு தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.



திருப்பூர்தெற்கு சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் தினேஷ்குமார்நேற்று மாநகராட்சி அலுவலகத்தில்தேர்தல் அதிகாரி அமித்திடம் வேட்புமனு தாக்கல் செய்தார். திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் சுப்பராயன், திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டி.கே.டி.நாகராஜன், காங்கிரஸ் கட்சியின் மாநகர் மாவட்ட தலைவர் கோபால்சாமி, இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாவட்ட செயலாளர் சையது முஸ்தபா உடன் இருந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.